தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேலூரில் 101 டிகிரி வெயில்**



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் வியாழக்கிழமை 101 டிகிரி வெயில் பதிவானது.

மதுரை, சேலம், திருச்சி ஆகிய இடங்களில் 100 டிகிரி வெயில் பதிவானது.

வியாழக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்): வேலூர் 101

திருச்சி, சேலம், மதுரை 100

தருமபுரி, பாளையங்கோட்டை, கரூர் பரமத்தி 98

சென்னை மீனம்பாக்கம் 95

சென்னை நுங்கம்பாக்கம், கோவை, கன்னியாகுமரி 94

கடலூர், தூத்துக்குடி 93

## திருமூர்த்தி அணையிலிருந்து ஏப்.8ல் தண்ணீர் திறப்பு

**பொள்ளாச்சி,**

பி.ஏ.பி. திட்டத்தில் திருமூர்த்தி அணையில் முதல் மண்டல பாசனத்துக்காக நான்காம் சுற்று தண்ணீர் வரும் ஏப்.8ம் தேதி திறக்கப்படுகிறது.

பி.ஏ.பி.,திட்டத்தில் திருமூர்த்தி அணையில் இருந்து 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகிறது. தற்போது, முதல் மண்ட பாசனத்தில் மூன்றாவது சுற்று தண்ணீர் வழங்கப்படுகிறது. மூன்றாவது சுற்று தண்ணீர் வரும் 31ம் தேதியுடன் நிறுத்தப்பட்டு, நான்காவது சுற்று தண்ணீர் வரும் ஏப்.8ம் தேதி திறக்கப்படுகிறது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை பிஏபி அலுவலகத்தில் நடைபெற்றது. பிஏபி திட்டக் குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம் தலைமை வகித்தார். கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் முன்னிலை வகித்தார். செயற்பொறியாளர்கள் செல்வராஜ், சுப்ரமணியம், பகிர்மான குழுத் தலைவர்கள் பங்கேற்றனர்.

பிஏபி திட்டக் குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம் கூறுகையில், "நான்காவது சுற்றுக்கு 17 நாள்கள் வழங்கப்பட வேண்டிய தண்ணீர், தற்போது 10 நாள்களுக்கு மட்டுமே வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் திருட்டு அதிக அளவில் நடந்துவருவதால், ஏற்கெனவே அதிகமான தண்ணீர் வழங்கியும் விவசாயிகளுக்கு பயன்கிடைக்கவில்லை. தண்ணீர் திருட்டை தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 51.95 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 51.95 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 414 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.92 டி.எம்.சி.

**1,070 மூட்டை சூரியகாந்தி விதை ஏலம்**

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை நடந்த ஏல விற்பனைக்கு 1,070 மூட்டை சூரியகாந்தி விதைகள் கொண்டு வரப்பட்டன.

வரத்து இல்லாததால் நிறுத்தப்பட்டிருந்த ஏல விற்பனை, கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்று வருகிறது. ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் விதைகளைக் கொண்டு வந்திருந்தனர்.

இவற்றை சமையல் எண்ணெய் மில்கள் மற்றும் விவசாயிகள் கொள்முதல் செய்தனர். மொத்தம் வந்திருந்த 52 ஆயிரத்து 426 கிலோ வரத்தில், அதிகபட்ச விலை கிலோ ரூ. 34.39, குறைந்த பட்ச விலை ரூ. 29.20 என விற்பனையானது.

மொத்தம் ரூ. 16.93 லட்சம் விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது.

விதைகளை ஈரப்பதமின்றி நன்கு காயவைத்துக கொண்டு வந்தால் கூடுதல் விலை கிடைக்குமென விற்பனைக் கூட கண்காணிóப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

**ஈரோடு மாட்டுச் சந்தை: கால்நடைகள் வரத்து அதிகரிப்பு**

**ஈரோடு,**

ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் மாடுகள் வரத்து வியாழக்கிழமை அதிகரித்துள்ளது. வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் இச்சந்தையில் மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், திருப்பூர் மற்றும் ஈரோட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் வருகின்றனர். இவற்றை கொள்முதல் செய்ய கர்நாடகம், ஆந்திரம், கேரளம், கோவா, மகராஷ்டிரம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்துசெல்கின்றனர். இச்சந்தையில் இந்த வாரம் 600 பசுக்கள், 300 எருமைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. பசுக்கள் ரூ. 18,000 முதல் ரூ. 34,000 வரையிலும், எருமைகள் ரூ. 16,000 முதல் ரூ. 34,000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டன. மகராஷ்டிர மாநிலத்தில் இருந்து அதிகளவிலான வியாபாரிகள் வருவதாலும், அவர்கள் அதிக விலை கொடுத்து

வாங்குவதாலும் சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

**கரும்பு விவசாயிகளுக்கு இலவச உரம் அளிப்பு**

**ராசிபுரம்,**

பெரம்பலூர் வேப்பந்தட்டை வி.வி.சர்க்கரை ஆலை நிர்வாகம் சார்பில், கரும்பு விவசாயிகளுக்கு இலவச உரம், நுண்ணூட்டச் சத்துக் கலவை போன்றவை வழங்கும் விழா ராசிபுரத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில், ஆலை கரும்பு அலுவலர் ரங்கராஜன், உர விநியோகஸ்தர் ஜெயபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சர்க்கரை ஆலை முதுநிலை மண்டல மேலாளர் பிரேம் ஆனந்த் ராசிபுரம், நாமகிரிப்பேட்டை பகுதி விவசாயிகளுக்கு உரங்களை வழங்கினார். ராசிபுரம், நாமகிரிப்பேட்டை பகுதிகளில் மறுதாம்பு கரும்பு பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு இலவசமாக ஏக்கர் ஒன்றுக்கு தலா ஒரு மூட்டை யூரியா, பொட்டாஷ், 10 கிலோ நுண்ணூட்டச் சத்துக் கலவைகள் போன்றவை வழங்கப்பட்டன. இதேபோல, முள்ளுக்குறிச்சி பகுதியில் நடைபெற்ற விழாவில் விவசாயிகளுக்கும் உரங்கள் வழங்கப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எக்டேருக்கு 24 டன் நெல் மகசூல் :மதுரை விவசாயிக்கு மாநில முதல்பரிசு**



**மதுரை** : பயிர்விளைச்சல் போட்டியில் எக்டேருக்கு 24 டன் நெல் மகசூல் பெற்று, மாநில அளவில் முதல்பரிசு பெற்றுள்ளார் மதுரை விவசாயி சேதுமாதவன்.மாவட்டத்தில் ஆண்டுதோறும் 65 ஆயிரம் எக்டேர் அளவில் நெல் சாகுபடி நடைபெறும். இந்தாண்டு வறட்சியால், 35 ஆயிரம் எக்டேர் அளவுக்கே சாகுபடி நடந்துள்ளது. இந்நிலையில், ஜனவரி முதல் மார்ச் வரையில் நடந்த கோடை சாகுபடியில் விவசாயி சேதுமாதவன் இந்த சாதனையை புரிந்துள்ளார்.சின்ன இலந்தைக்குளத்தில் உள்ள அவரது நிலத்தில், செம்மைநெல் சாகுபடி முறையில் நடவு செய்து, கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சி, அதிக மகசூல் பெற்றுள்ளார். சாதாரணமாக ஒரு எக்டேர் நிலத்தில் 10 டன் அளவுக்கு நெல் மகசூல் இருக்கும். ஆனால் சேதுமாதவன் நிலத்தில் 24 டன் என்று, அதிகளவாக கிடைத்துள்ளது.அவர் கூறியதாவது: போட்டி குறித்து அதிகாரிகளிடம் கேட்டேன். அவர்கள் ஆலோசனைப்படி மண்பரிசோதனை செய்து, நீண்ட கால பயிரான, சிஆர் 1009 என்ற நெல்ரகத்தை தேர்வு செய்தேன். நடவுக்கு 30 நாட்களுக்கு முன்பே, பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய அறிவுறுத்தினர். அதன்படி செய்து, அவற்றை அதேநிலத்தில் மடக்கி உழவு செய்தேன். மேலும் ஜிப்சம் மற்றும் அதிகளவில் இயற்கை உரங்களையும் பயன்படுத்தினேன். மிஷின் நடவு செய்து, கோனோவீடர், பவர் வீடர் மூலம் களையெடுத்தேன். 5 மாதத்திற்குப் பின் அதிக மகசூல் கிடைத்து பரிசும் கிடைத்தது," என்றார். வாழ்த்த: 97881 69045உதவி இயக்குனர் லட்சுமணன், "நீர்மறைய நீர்கட்டு, நிறையவரும் நெல்கட்டு' என்றபடி, காய்ச்சலும், பாய்ச்சலுமாக தண்ணீர் பாய்ச்சினார். இயற்கை உரம், உயிர்உரங்கள், நுண்ணூட்ட உரங்களை, சிபாரிசுபடி பயன்படுத்தினார். முறையான சாகுபடி, இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை அளித்த ஊக்கமே சாதிக்க காரணம்" என்றார்.

## வறட்சியை தாங்கி வளரும் நெல்: விவசாயிகள் ஆர்வம்

**கோவை** : மானாவாரி நிலங்களில் வறட்சியை தாங்கி வளரும், 'அண்ணா-4' என்ற புதிய ரக நெல்லில் நல்ல மகசூல் கிடைப்பதால், விவசாயிகள் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோவை வேளாண் பல்கலையும், பரமக்குடி வேளாண் ஆராய்ச்சி மையமும் இணைந்து 2009ம் ஆண்டு, 'அண்ணா-4' என்ற புதிய மானாவாரி ரக நெல் அறிமுகம் செய்தது. வேளாண் பல்கலை வேளாண் - உயிரியல் தொழில்நுட்ப துறை இயக்குனர் சந்திரபாபு கூறியதாவது:

ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் மானாவாரி நெல், ஒரு லட்சம் எக்டரில் பயிர் செய்யப்படுகிறது. பெரும்பாலும் நாட்டு நெல் மற்றும் ஆடுதுறை நெல் ரகங்களே சாகுபடி செய்யப்பட்டு வந்தன. இவை குறைந்த விளைச்சலையும், சாய்ந்து வளரும் தன்மையும் உடைய நெல் ரகங்கள். மழை குறைவாக உள்ள காலங்களில், குறைந்த விளைச்சலை மட்டுமே பெறமுடியும்.

இப்பிரச்னைக்கு தீர்வு காண, அண்ணா-4 என்ற புதிய ரக நெல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நெல் வறட்சியை தாங்கி வ ளர்வதோடு, நேரடி விதைப்புக்கும் ஏற்றது. 105 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். அண்ணா-4 ரகம் 66 சதவீதம் அறவைத்தி றனும், நீண்ட சன்னமான அரிசியையும் கொண்டது. எக்டருக்கு நான்கு முதல் ஐந்து டன் வரை மகசூல் கிடைக்கும். வறட்சி அதிகம் உள்ள மாவட்டங்களில், இந்நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்துள்ளது. தற்போது வறட்சி அதிகரித்து இருப்பதால் அண்ணா -4 நெல் ரகத்தை பயிரிட விவசாயிகள் விரும்புகின்றனர். இவ்வாறு, சந்திரபாபு கூறினார்.மேலும், விபரங்களுக்கு **0422-6611262** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

### மாணவர்களை தேடி வந்தாச்சு நூலகங்கள்! : வேளாண் பல்கலை, 'இ-கிரந்த்' அறிமுகம்

**கோவை**: 'இனி மாணவர்கள், நூலகங்களை தேடி போக வேண்டியதில்லை; நூலகங்கள் அவர்களை தேடி வீட்டுக்குள் வந்துவிட்டன' என, வேளாண் பல்கலை நூலக சிறப்பு அதிகாரி விஜய ராகவன் பேசினார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், 'இ--கிரந்த்' என்ற திட்டத்தில், நாட்டில் உள்ள அனைத்து வேளாண் பல்கலை நூலகங்களையும் 'டிஜிட்டல்' நூல ங்களாக மாற்றி வருகிறது. கோவை வேளாண் பல்கலை நூலகமும் டிஜிட்டல் நூலகமாக மாற்றப் பட்டுள்ளது. இதன் துவக்க விழாவில், வேளாண் பல்கலை நூலக சிறப்பு அதிகாரி விஜயராகவன்

பேசியதாவது: நாட்டில் 54 வேளாண் பல்கலை கள், 100க்கும் மேற்பட்ட வேளாண் ஆராய்ச்சி கழகங்கள் உள்ளன. இங்குள்ள நூலகங்களில் வேளாண் கல்வி பயிலம் மாணவர்களுக்கு பயன்படும் அரிய வகை நூல்கள் மற்றும் ஆய்வு ஏடுகள் உள்ளன. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், 'இ-கிரந்த்' திட்டத்தில், அனைத்து வேளாண் பல்கலை நூலகங்களையும் டிஜிட்டல் நூலகங்களாக மாற்றி வருகிறது. வேளாண் பல்கலை நூலகத்தில் உள்ள நூல்களில், 7.8 லட்சம் பக்கங்கள், 'இ-பேஜ்'களாக மாற்றப்பட்டுள்ளன. இனி மாணவர்கள் நூலகங்களை தேடி, போக வேண்டியதில்லை; நூலகங்கள் அவர்கள் தேடி வீட்டுக்குள் வந்து விட்டன. வேளாண் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், நாட்டில் உள்ள எந்த நூலகத்தில் இருந்தும் நூல்களை தேடிப் படிக்கலாம். இவ்வாறு, விஜயராகவன் பேசினார். டிஜிட்டல் நூலகத்தை துவக்கி வைத்து, வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், 'வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பங்களை மாணவர்கள் பயன் படுத்த தேவையான வசதிகளை நாம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இணையத்தளங்களில் ஏராளமான தகவல்கள் உள்ளன. பேராசிரியர்கள் இணையத்தளங்களில் ஆராய்ச்சி கட்டுரைகளை எழுத வேண்டும்' என்றார்.

வேளாண் கல்லூரி டீன் மகிமைராஜா, தகவல் தொழில்நுட்ப அதிகாரி வெங்கடாசலம், வேளாண் இன்ஜி., கல்லூரி டீன் திவாகர் துரைராஜ் துணை நூலகர் சங்கர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், 'இ-கிரந்த்' திட்டத்தில், அனைத்து வேளாண் பல்கலை நூலகங்களையும் டிஜிட்டல் நூலகங்களாக மாற்றி வருகிறது. வேளாண் பல்கலை நூலகத்தில் உள்ள நூல்களில், 7.8 லட்சம் பக்கங்கள், 'இ-பேஜ்'களாக மாற்றப்பட்டுள்ளன.

## உர மானியம் குறைப்பு: மத்திய அரசு அதிரடி

**புதுடில்லி**: விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய உரமான, பொட்டாஷுக்கு வழங்கப்படும் மானியத்தை மத்திய அரசு குறைத்துள்ளது. சர்வதேச சந்தையில் பொட்டாஷ் உரம் விலையில் ஏற்பட்டுள்ள சரிவை தொடர்ந்து, அதற்கு வழங்கப்படும் மானியத்தில், கிலோவுக்கு, ரூ. 3.50 குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய

உரத்துறை செயலர், சக்திகாந்தா தெரிவித்துள்ளார். இதன் மூலம், அரசுக்கு, ஆண்டொன்றிற்கு, 900 கோடி ரூபாய், மிச்சமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு ஏக்கரில் அறுவடை செய்த செடிகள் ரூ.8,000க்கு விற்பனை

**மேட்டூர்**: வறட்சி காரணமாக ஒரு ஏக்கரில் அறுவடை செய்யப்படும் வேர்க்கடலை செடிகளை, 8,000 ரூபாய்க்கு கால்நடை விவசாயிகள் கொள்முதல் செய்கின்றனர். நடப்பாண்டு பருவமழை தவறியதால், கொளத்தூர் சுற்றுப்பகுதியில் கடும் வறட்சி நீடிக்கிறது. இதனால், கால்நடைகளுக்கான பசுமை மற்றும் உலர் தீவனங்களுக்கு கடும் பற்றாக்குறை நீடிக்கிறது. பற்றாக்குறை சமாளிக்க ஒரு ஏக்கரில் நெல் அறுவடை செய்த பின், வைக்கோலை கால்நடை விவசாயிகள், 8,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர்.

கொளத்தூர் பகுதியில் நெல் சாகுபடி குறைவு என்பதால், வைக்கோல் போதுமான அளவு கிடைப்பதில்லை.எள், சோளம், வேர்க்கடலை உள்ளிட்ட பயிர்கள் அறுவடை நடக்கிறது. இதனால், கால்நடைகளுக்கு தீவனமாக தரும் கடலை செடிகளை ஒரு ஏக்கரில் அறுவடை செய்தால், அதை, 8,000 ரூபாய்க்கு விவசாயிகள் கொள்முதல் செய்கின்றனர்.

வறட்சி, பற்றாக்குறை காரணமாக வைக்கோலுக்கு இணையாக கடலை செடி விலையும் அதிகரித்துள்ளது.

## விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு 1000 மூட்டை வேர்க்கடலை வரத்து

**விருத்தாசலம்'**; விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று ஒரே நாளில் 1,000 மூட்டை வேர்க்கடலை விற்பனைக்கு வந்தன. விருத்தாசலம் பகுதியில் மானாவாரி வேர்க்கடலை அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. இதனால் விருத்தாசலம் மார்க்கெட் கமிட்டிக்கு வேர்க்கடலை வரத்து அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் 1,000 மூட்டை வேர்க்கடலை விற்பனைக்கு வந்தன. மேலும், நெல் 3,000 மூட்டை, மக்காச்சோளம் 300 உட்பட 4,400 மூட்டை வேளாண் விளை பொருட்கள் விற்பனைக்கு வந்தன.

வேர்க்கடலை மூட்டை (80 கிலோ) 4,266 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், எள் 7,366 ரூபாய், நெல் 1,470, உளுந்து 5,226,

மக்காச்சோளம் 1,309, பச்சை பயறு 6,219, தட்டைபயறு 3,449, கம்பு 1,706, கேழ்வரகு 1,989, வரகு 1,472, தேங்காய் பருப்பு 5,269, கொள்ளு 2,589, துவரை 3,500, சூரியகாந்தி 2,489 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டன.

## கள்ளக்குறிச்சி பகுதியில் கேழ்வரகு பயிரிட்ட : விவசாயிகள் மகிழ்ச்சி

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் கேழ்வரகு பயிர் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கள்ளக்குறிச்சி அடுத்த எரவார் பகுதியில் விவசாயிகள் கேழ்வரகு பயிர் செய்கின்றனர். அதிகம் தண்ணீர் பாய்ச்சினால் ஏக்க ருக்கு 1 டன் வரை மகசூல் தரும். 90 நாட்களுக்குள் அதிகபட்சமாக மூன்று முறை களை எடுத்தும், பயிரிட்டவுடன் ஒரு முறை மட்டும் உரமிட்டால் கேழ்வரகு மகசூல் அதிகம் கிடைக்கும். கள்ளக்குறிச்சி அடுத்த எரவார் பகுதியில் பயிரிட்டுள்ள கேழ்வரகு பயிர் அமோகமாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## செண்டுமல்லி விளைச்சல் ஜோர்; விவசாயிகள் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், திருமணம் மற்றும் கோவில் திருவிழாக்கள் சீஸனை ஒட்டி, விவசாயிகள் அதிகளவில், செண்டுமல்லி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகள் மலர்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, குறைந்த பாசன வசதியில் அதிகளவில் பூக்கக்கூடிய செண்டுமல்லி உள்ளிட்ட மலர்களை, மாவட்டம் முழுவதும் பரவலாக விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். மேலும், ஆண்டு முழுவதும், சந்தையில் செண்டு மல்லி பூவுக்கு வரவேற்பு உள்ளதாலும், பெரும்பாலும் நல்ல விலை கிடைத்து வருவதாலும், விவசாயிகள் செண்டு மல்லி சாகுபடியில், ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, பங்குனி, சித்திரை மாதங்களில் நடக்கும் திருவிழாக்கள் மற்றும் திருமணம் சீஸன்களை குறிவைத்து, தர்மபுரி மாவட்டத்தில், நல்லம்பள்ளி, அதகப்பாடி, பென்னாகரம், பாலக்கோடு, பைசுஹள்ளி உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் செண்டு மல்லி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து, பைசுஹள்ளியை சேர்ந்த விவசாயி கந்தசாமி கூறியதாவது: கடந்தாண்டு மாவட்டத்தில் போதிய பருவமழை இல்லை. இதனால், எங்கள் பகுதிகளில் உள்ள கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பெரும்பாலான விவசாயிகள் கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை.

குறைந்த மாதம் மற்றும் குறைந்த பாசன வசதியில் வளர மற்றும் வருவாய் தரக் கூடிய செண்டுமல்லி உள்ளிட்ட மலர்களை ஆர்வத்துடன் சாகுபடி செய்துள்ளனர். மேலும், தற்போது நடக்கும் திருமணம், கோவில் விழாக்களால் செண்டு மல்லிக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவதால், மகிழ்ச்சியாக உள்ளது, என்றார்.

## மாம்பிஞ்சுகள் உதிர்வதால் விவசாயிகள் கவலை! பாதிப்பை தவிர்க்க ஆலோசனை அவசியம்

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், கொளுத்தும் வெயில் காரணமாக, மா மரங்களில் இருந்து மாம்பிஞ்சுகள் மற்றும் காய் அதிகளவில் உதிர்ந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், நெல், மா, தென்னை, கரும்பு, மரவள்ளி கிழங்கு, பருத்தி, மஞ்சள் ஆகிய அதிகம் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் ஆகும். தமிழக அளவில், மா அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ள, மாவட்டங்களில் தர்மபுரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உட்பட மாவட்டம் முழுவதும், சாதாரண முறையில், 16,183 ஹெக்டரும், அடர் நடவு முறையில், 524 ஹெக்டர் என மொத்தம், 16,707 ஹெக்டர் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த, இரண்டு ஆண்டுகளுக்கு முன் மாவட்டத்தில் போதிய பருவ மழை இல்லாததால், பூக்கள் மற்றும் பிஞ்சுகள் அதிகளவில் உதிர்ந்தது. இதனால், மா உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், மா விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். கடந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை விவசாயிகளை ஏமாற்றினாலும், வட கிழக்கு பருவமழை ஓரளவுக்கு பெய்தது. இதனால், மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் ஓரளவுக்கு உயர்ந்ததுடன், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்தது. பருவமழையை தொடர்ந்து,

மாவட்டம் முழுவதும் குளுமையான சீதோஷ்ண நிலை, நடப்பாண்டு பிப்ரவரி மாதத்தின், இரு வாரம் வரை தொடர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்டத்தில் நிலவி வந்த குளுமையான பருவ நிலை காரணமாக, மாவட்டம் முழுவதும் சாகுபடி செய்யப்பட்டுள்ள பெரும்பாலான மா மரங்களில், அதிகளவில் பூக்கள் பூத்து குலுங்கியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். ஆனால், ஃபிப்ரவரி இறுதி முதல் மாவட்டத்தில் பகல் நேரங்களில் வெயில் கொளுத்தி வருகிறது.

குறிப்பாக, கடந்த, 20 நாட்களுக்கும் மேல் வெயிலின் அளவு, 90 டிகிரி முதல், 100 டிகிரி வரை கொளுத்தி வருவதால், மா மரங்களில் உள்ள பிஞ்சு மற்றும் காய்கள் அதிகளவில் உதிர்ந்து வருகிறது.

மேலும், கோடை மழை இல்லாததால், மாங்காய்கள் சிறுத்து போனதால், விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். கொளுத்தும் வெயிலால், தாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதாக, விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

இதுகுறித்து, மாட்லாம்பட்டியை சேர்ந்த விவசாயி சிவராமன் கூறியதாவது: மாட்லாம்பட்டி, பெரியாம்பட்டி, காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு வழக்கத்துக்கு, மாறாக கடந்த பிப்ரவரி இறுதியில் இருந்து வெயில் கொளுத்தியதால், இப்பகுதியில் உள்ள மா மரங்களில் இருந்து மாம்பூக்கள் மற்றும் பிஞ்சுகள் அதிகளவில் உதிர்ந்தது. விவசாயிகளின் எதிர்பார்ப்புபடி, கோடை மழை பெய்யாததால், மாங்காய் பெருக்க வில்லை. எனவே, தர்மபுரி மாவட்டத்தில் மா சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு உரிய ஆலோசனை வழங்கி, மா உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தவிர்க்க வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## வெயிலால் கோழிக்கு அம்மை நோய் பண்ணைகளுக்கு யூ.டி.ஆர்.சி., யோசனை

**ஈரோடு**: வெயில் காலத்தில், கோழிகளை தாக்கும், அம்மை நோயில் இருந்து தற்காத்து கொள்ளும் வழிமுறையை, கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முனைவர் யசோதை மற்றும் டாக்டர்கள் கவிதா மற்றும் கிருபாகரன் பண்ணையாளருக்கு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கூறியதாவது: கோழிகளை, அம்மை நோய், தற்போது வரும் கோடை காலங்களில் தாக்க வாய்ப்புள்ளதால், அதன் அறிகுறிகள் மற்றும் தடுப்பு முறைகள்

பற்றி, கோழிப் பண்ணையாளர்கள் அறிந்து கொள்வது அவசியம். கோழி அம்மை நோய், சாதாரணமாக பண்ணை கோழிகளை தாக்கும். இது, மெதுவாக, எளிதில் பரவும். கோழியின் தோல்களில் பாதிப்பு இருப்பின், இறப்பு எண்ணிக்கை குறவாக இருக்கும். கோழியின் உடலில் தீவிரப்பரவல் இருந்தால், இறப்பு சற்றே அதிகம் இருக்கும். இந்நோய் எல்லா வயது கோழிகளுக்கு வரக்கூடியதாகும். கோழி அம்மை நோயால் நாட்டுக்கோழி வாகைகள், வான்கோழி, பெரிய பறவைகள், காடை ஆகியவை பாதிக்கப்படும். இந்நோயால், மற்ற விலங்குகள் பாதிப்படைவதில்லை. கோழி குஞ்சுகளுக்கு, இந்நோய் வருமானால் இறப்பு, எண்ணிக்கை சற்றும் அதிகமாகவே இருக்கும்.

நமது நாட்டில் டிசம்பர் முதல் மே மாதம் வரை, இந்நோய் பெருமளவில் பரவலை காணலாம். நோயற்ற கோழிகளில் இறகு இல்லாத பகுதியில், பாதிப்பு அதிகமிருக்கும். கோழி அம்மை நச்சுயிரி தாக்குவதில் இருந்து, அறிகுறிகள் வெளிப்படுத்த எடுத்துக்கொள்ளும், கால அவகாசம், நான்கு முதல், பத்து நாட்களாகும்.

தொண்டை அயற்சி மற்றும் தோல் சம்பந்தப்பட்ட, இரண்டு வகையான பாதிப்பு ஏற்படும். தோல் சம்பந்தப்பட்ட அயற்சியில் கொப்புளங்கள், தெ ாண்டை, தாடை மற்றும் கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும். பொதுவாக கோழிகள் மெலிந்து விடும். கோழியின் உடல் எடை குறைந்துவிடும்.

முட்டையிடும் திறன் குறையும். முதல் வார குஞ்சுகளுக்கு, அம்மை தடுப்பூசி போட்டு, அதன் பின், ஆறு முதல், எட்டு வாரங்களில் கோழி அம்மை தடுப்பூசி போடவேண்டும். மற்ற வியாதியாக இருந்தால், கோழி அம்மைத்தடுப்பூசி போடுவதை தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு வீரிய மருந்தும், விட்டமின் மருந்தும் கொடுப்பது நல்லது.

கொப்பளங்கள் மீது போரிக்களிம்பு தடவலாம். பொதுவாக, முட்டையிடும் பருவத்துக்கு, ஓரிரு மாதங்களுக்கு முன், தடுப்பூசி போடுவது நல்ல பலன் கொடுக்கும். முட்டையிட்டு கொண்டிருக்கும் கோழிகளுக்கு, அம்மைத்தடுப்பூசி போடுவதை தவிர்க்கவும். கோழிகளுக்கு வீரியம் அழிக்கப்பட்ட தடுப்பூசி போடுவது நல்லது. இந்நோய் வராமல் தடுக்க, பண்ணைகளில், ஆரோக்கிய விதி முறைகளை கவனமாய் அனுசரிப்பதோடு, சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும், என்றனர்.

## கால்நடைத்துறை அதிகாரிகளுக்கு பாராட்டு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 21 நாளில், இலக்கை கடந்து, 3.69 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டதற்காக, சென்னை இயக்குனரகத்தில் இருந்து, கால்நடைத்துறை அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில் கடந்த, ஒன்றாம் தேதி முதல், 21ம் தேதி வரை, கால்நடைகளுக்கு, பஞ்சாயத்து வாரியாக தடுப்பூசி முகாம் நடந்தது. இதற்காக, ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையால், மொத்தம், 3.70 லட்சம் தடுப்பூசிகள் பெறப்பட்டது. இணை இயக்குனர் ஜெயராமன் கண்காணிப்பில், துணை இயக்குனர் பிரகாசம் மற்றும் சிறப்பு அறிஞர் முருகன் ஆகியோர் தலைமையில், கோமாரி நோய் தடுப்பூசி போட, 132 உதவி மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர், இம்மாவட்டத்தில் உள்ள, 2,206 கிராமங்களுக்கு சென்று, தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டனர். நபார்டு உதவி பொது மேலாளர் ஹரிகிருஷ்ணராஜ், சென்னை மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் உதவி இயக்குனர் சுந்தரேசன், கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் டாக்டர் பாண்டியன், கலெக்டர் சண்முகம் ஆகியோர், யூனியன் வாரியாக திடீர் ஆய்வு செய்தனர். கடந்த, 21ம் தேதியுடன், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் முடிவடைந்தது. இம்மாவட்டத்தில், 21 நாளில், நூறு சதவீதம் தடுப்பு நடவடிக்கையாக, மொத்தமாக, மூன்று லட்சத்து, 66 ஆயிரத்து, 290 தடுப்பூசி போட கால்நடை பராமரிப்பு துறை தலைமையகம், இலக்கு நிர்ணயித்தது. இலக்கை முறியடித்து, 100.73 சதவீதமாக, மூன்று லட்சத்து, 68 ஆயிரத்து, 950 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. இலக்கை விட, 2,660 தடுப்பூசி அதிகமாக போட்டு, சாதனை படைத்துள்ளனர்.

இம்மாவட்டத்துக்கு அனுப்பிய, 3.70 லட்சம் தடுப்பூசியில், எஞ்சிய, 1,050 தடுப்பூசிகளை, கால்நடை பராமரிப்பு துறை பத்திரமாக பாதுகாத்து வைத்துள்ளனர். வெளிமாநிலங்களில் இருந்து கால்நடை இனங்களை விலைக்கு வாங்கியுள்ளோர், நோய் அறிகுறியிருப்பின், அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களை அணுகி, தடுப்பூசி போட்டுக்கொள்வதற்காக, இவற்றை வைத்துள்ளனர்.மாவட்டம் வாரியாக, தடுப்பு நடவடிக்கை விபரங்களை, பட்டியலிட்டு, சென்னை தலைமை அலுவலகத்துக்கு அனுப்ப, இயக்குனரகம் உத்தரவிட்டது.அதன்படி, ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை, நூறு

சதவீதத்தை கடந்து, தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டதால், சென்னை இயக்குனரகத்தில் இருந்து பாராட்டு தெரிவித்துள்ளனர்.

### மேட்டூரில் நீர் திறப்பு

**மேட்டூர்**: மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு, நேற்று காலை முதல், 2,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல் மேல் பகுதி காவிரி நீர்பிடிப்பு பகுதியில், கோடை மழை பெய்ததால், கடந்த, 23ம் தேதி, 605 கன அடியாக இருந்த மேட்டூர் அணை நீர் வரத்து, 24ம் தேதி, 1,251 கன அடியாக அதிகரித்தது. டெல்டா மாவட்டங்களுக்கு, குடிநீர் தேவை அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு, 2,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 49 அடியாகவும், நீர் இருப்பு, 17 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

### முட்டை விலை 260 காசுகளாக சரிவு



**நாமக்கல்** : நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் முட்டை விலையில் மேலும் 10 காசு குறைத்து முடிவு செய்யப்பட்டது. அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 260

காசாக நிர்ணயிக்கப்பட்டது.கோடை வெப்பத்தின் காரணமாக, முட்டை விற்பனை தமிழகம் மற்றும் கேரளாவில் குறைந்து வருவதால், முட்டை விலையை குறைப்பதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.40, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.63 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மற்ற மண்டலங்களில் முட்டை விலை விவரம் வருமாறு: (பைசாவில்) பெங்களூர்- 290, மைசூர்- 297, ஐதராபாத்- 270, மும்பை- 308, விஜயவாடா- 280, கொல்கத்தா- 310, டெல்லி- 277 காசுகள்.

### பூவன் கிலோ ரூ.10க்கு விற்பனை



**கோவை** : தூத்துக்குடி பூவன் ரக வாழை, தேனி பகுதிகளில் ஜி9 ரக வாழை சீசன் களை கட்டுவதால் கோவை வாழை மார்க்கெட்டுக்கு தினமும் 30 முதல் 40 டன் வரை அதன் வரத்து உள்ளது. இதனால் விலையும் குறைந்துள்ளது. நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி கடந்த மாதத்தில் 18 ரூபாய்க்கு விற்கப்பட்ட பூவன் ரக வாழை கிலோ 1க்கு 8 ரூபாய் குறைந்து ரூ.10க்கு விற்கப்பட்டது. ரூ.20க்கு விற்கப்பட்ட மோரீஸ் ரூ.10 குறைந்து ரூ.10க்கு விற்கப்பட்டது. செவ்வாழை ரூ.38ல் இருந்து ரூ.32க்கும், கதளி ரூ.33ல் இருந்து 23க்கும், நாடன் ரூ.25ல் இருந்து 17க்கும், ரஸ்தாளி ரூ.28ல் இருந்து ரூ.20க்கும் விலை குறைந்து விற்பனையானது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

### சின்னமனூர் பகுதி கிராமங்களில் சின்ன வெங்காயம் நடவுபணி தீவிரம்

**சின்னமனூர்**, : சின்னமனூர் கிராமங்களில் சின்ன வெங்காயம் நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது. சின்னமனூர் ஒன்றிய கிராமங்களில் கிணற்று மற்றும்

மழைநீர் பாசனத்தின் வாயிலாக தொடர் விவசாயம் செய்து வருகின்றனர். கிணற்று பாசனத்தின் வாயிலாக வெண்டை, பீன்ஸ், கத்தரி, முள்ளங்கி, பீட்ரூட், கோஸ், கேரட், பாவர்காய் என பல வகையான காய்கறிகள், கரும்பு, தென்னை, திராட்சை, கோவக்காயும் மானாவாரியில் துவரை, உளுந்து, பாசிப்பயறு, சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் என பயிர்களும் விளைவித்து எடுக்கப்படுகிறது. இந்நிலையில் அய்யம்பட்டி, புலிகுத்தி, சிந்தலைசேரி, சின்னஓவுலாபுரம், முத்துலாபுரம், எரசை, கன்னிசேர்வைபட்டி போன்ற கிராமங்களில் 70 நாட்களில் அறுவடைக்கு வரும் சின்ன வெங்காயம் தற்போது நடவு பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் விலை ரூ.80 முதல் ரூ.100 வரையில் விலை போனதால் பொதுமக்கள் வாங்கிட முடியாமல் திண்டாடினர். வெளி மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டதாலும் தமிழகத்தில் வெங்காயம் உற்பத்தி குறைந்து போனதாலும் விலை உயர்ந்ததாக கூறப்பட்டது. இந்நிலையில் தற்போது தேனி மாவட்டத்தில் பரவலாக உற்பத்தி திறனை பெருக்கியதால் சின்னவெங்காயத்தின் உச்ச விலை சர்ரென குறைந்து கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்கப்பட்டு வருகிறது. மேலும் குளிர் காலம் முடிந்து கோடை காலம் துவங்கியிருப்பதால் தொடர்ந்து கிணற்று பாசனத்தால் சின்னவெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் விலை அதிகரிக்காமல் இதே விலையே நீடிக்கும். மழை என்று துவங்கி விட்டால் வெங்காயம் அழுகிடும் நிலை ஏற்படும்போது விலை உயர்வதற்கான சூழல் உருவாகும். சின்னமனூர் பகுதி பல கிராமங்களில் சின்ன வெங்காயம் நடவு செய்யப்பட்டு விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். தற்போது சின்னமனூர் ஏலச்சந்தையில் விவசாயிகள் விளைவித்து எடுக்கப்பட்டு வருகின்ற சின்னவெங்காயம் மூடைக்கணக்கில் குவித்து வருகின்றனர். தமிழக கேரளா வியாபாரிகள் ஏலத்தில் எடுத்து வெளி மார்க்கெட்டிற்கு கொண்டு செல்கின்றனர்.

**பருத்தியில் குருத்துப்பூச்சி தாக்குதலால் மகசூல் குறைவு**

**சிவகங்கை,** : மானாமதுரையில் கோடை பருத்தி சாகுபடியில் குருத்து பூச்சி நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால் மகசூல் குறைந்து வருகிறது. இந்த பூச்சி

தாக்குதலை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

மானாமதுரை மற்றும் சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹெக்டேர்களில் விவசாயிகள் கோடை பருத்தி சாகுபடி செய்துள்ளனர். மாவட்டத்தில் பருவமழை முற்றிலும் பொய்த்து வருவதால் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் வறட்சி காரணமாக பருத்தியில் குருத்துப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் குறையும் அபாயம் உள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

பருத்தியில் குருத்துப்பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை கூறுகையில், “வட்டார வேளாண் துறை அலுவலர்கள் மிளகனூர், கட்டிக்குளம், குவளைவேலி, வாகுடி, விளத்தூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளிடம் பருத்தி சாகுபடியில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த செய்முறை விளக்கம் அளித்து வருகின்றனர்.

குருத்துப்பூச்சியால் தாக்கப்பட்டுள்ள பருத்தி பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 30 கிலோ கார்போபியூரான், 3 கிராம் வீதம் தூவி செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும். அல்லது ஆல்டிகார்ப் 10 கிராம் மருந்தினை ஹெக்டேருக்கு 10 கிலோ வீதம் தூவியும் கட்டுப்படுத்தலாம். தாக்குதல் அதிகம் இருந்தால் குளோரிபைரிபாஸ் 20 இசி மருந்தினை ஹெக்டேருக்கு 2 லிட்டர் வீதம் தெளிக்கலாம். மானா மதுரை வட்டார விவசாயி கள் கூடுதல் விபரம் அறிய 9677367772, 9442880379 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்“ என்று தெரிவித்தார்.

### மாவுப்பூச்சியை விரட்டியடிக்க தேங்காய் பால், புளித்த மோர்

**திருச்சுழி,** : காய்கறி செடிகளை தாக்கும் மாவு பூச்சிகளை கட்டுப்படுத்த தேவையான ஆலோசனைகளை வேளாண் துறையினர் வழங்கியுள்ளனர். விருதுநகர் மாவட்டத்தின் சில பகுதிகளில் கத்தரி, வெண்டை, கொத்தவரை, தக்காளி, பருத்தி மற்றும் மிளகாய் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. தற்போது வறட்சியால் காய்கறி விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

வறட்சி ஒருபுறம் என்றால், காய்கறி செடிகளில் மாவு பூச்சி தாக்குதலால் மறுபுறம் பாதிப்பு அதிகரித்து வருகிறது. மாவு பூச்சி தாக்குதலால் காய்கறி செடிகளின் இலை, தண்டு பகுதிகளில் பாதிக்கப்படுகின்றன. மேலும் காய்ப்பு திறனும் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் காய்கறி பயிரிட்டுள்ள விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

இந்த நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் அதிகாரிகள் கூறுகையில், ''காய்கறி செடிகளில் மாவு பூச்சிகள் தாக்குதல் அதிகரித்து வருவதற்கு வறட்சியும் முக்கிய காரணம். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த 5 லிட்டர் தேங்காய் பால், 5 லிட்டர் புளித்த தயிர் இரண்டையும் சம அளவு கலந்து காற்றுப் போகாமல் குப்பை குழியில் மூடி வைக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு பின்னர் இந்த தேமோர் கரைசலில் அரை லிட்டர் எடுத்து, 10 லிட்டர் தண்ணீர் கலந்து கொளள வேண்டும். இதனுடன் 50 மில்லி வேப்ப எண்ணெய், 5 கிராம் காதி சோப்பு கலந்து பாதிக்கப்பட்ட செடிகள் மீது ஸ்பிரே செய்யலாம். இதன் மூலம் மாவு பூச்சிகள் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டு, பூக்கும் திறன் அதிகரிக்கும்,'' என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு நிதி ஆண்டில் வரலாறு காணாத அளவிற்கு முந்திரி ஏற்றுமதி உயரும்**



**கொச்சி,**

நடப்பு நிதி ஆண்டில் முதல் 11 மாதங்களில் (ஏப்ரல்–பிப்ரவரி) இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.4,624 கோடிக்கு முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது சென்ற நிதி முழு ஆண்டில் (2012–13) ரூ.4,420 கோடியாக இருந்தது. நடப்பு நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி புதிய புதிய சாதனை அளவை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

<u>ரூபாயின் வெளிமதிப்பு</u>

நடப்பு நிதி ஆண்டின் தொடக்கத்தில் இந்திய ரூபாயின் வெளிமதிப்பு கடுமையாக வீழ்ச்சி அடைந்ததால் முந்திரி ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் அதிகரித்துள்ளது. பிப்ரவரி மாதத்தில் அளவு அடிப்படையில் முந்திரி ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 12 சதவீதம் குறைந்து 7,009 டன்னாக சரிவடைந்த போதிலும் மதிப்பு அடிப்படையில் 6 சதவீதம் அதிகரித்து ரூ.315 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே நடப்பு நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி ரூ.5,000 கோடியை எட்ட வாய்ப்புள்ளது.

<u>தான்சானியா</u>

முந்திரி ஏற்றுமதி அதிகரித்துள்ள அதே வேளையில் கச்சா முந்திரி இறக்குமதி 14 சதவீதம் சரிந்து 7.32 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக தான்சானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா முந்திரி விலை அதிகரித்து வந்ததால் இறக்குமதி குறைந்தது. இதன் காரணமாக பதப்படுத்துதல் பணிகள் மந்தமடைந்தன. மேலும் ஏற்றுமதி அளவும் குறைந்தது என கைலாஷ் கேஷ்யூ எக்போர்ட்ஸ் உரிமையாளர் பி சோமராஜன் தெரிவித்தார்.

தற்போது உள்நாட்டில் சுமார் 7 லட்சம் டன் முந்திரி உற்பத்தியாகியுள்ளது. இது முந்திரி இறக்குமதி குறைந்ததால் ஏற்படும் பாதிப்பை ஓரளவு ஈடுகட்டும்.

<u>ஆப்பிரிக்க நாடுகள்</u>

கச்சா முந்திரி பாரம்பரியமாக ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது ஆப்பிரிக்க நாடுகளில் அறுவடை தொடங்கி விட்டது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து முந்திரி இறக்குமதி செய்யும் நாடுகள் விலையை குறைக்குமாறு இந்திய ஏற்றுமதியாளர்களை வலியுறுத்தி வருகின்றன.

**நடப்பு நிதி ஆண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி இலக்கை விஞ்ச வாய்ப்பு**



**கொச்சி,**

நடப்பு நிதி ஆண்டில் 230 கோடி டாலருக்கு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நறுமணப் பொருள்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது மற்றும் சர்வதேச சந்தையில் தேவைப்பாடு காணப்படுவது போன்ற காரணங்களால் இந்த இலக்கை விஞ்சி ஏற்றுமதி உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2013 ஆகஸ்டு மாதத்தில் வரலாறு காணாத அளவிற்கு ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மதிப்பு அடிப்படையில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 41 சதவீதம் அதிகரித்து ரூ.9,433 கோடியாக உயர்ந்துள்ளது. அதேபோல் அளவு அடிப்படையில் 27 சதவீதம் அதிகரித்து 5.72 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 4.50 லட்சம் டன் மற்றும் ரூ.6,696 கோடியாக இருந்தது என நறுமண பொருள்கள் வாரிய தலைவர் ஏ.ஜெயதிலக் தெரிவித்தார்.

மொத்த நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியில் இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்படும் நறுமணப் பொருள்களின் பங்களிப்பு இரண்டு

சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. குறிப்பாக, வடகிழக்கு மண்டலத்தில் இம்முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. சர்வதேச சந்தையில் இதற்கான தேவைப்பாடு அதிகமாக உள்ளதால் இதற்கு வளமான வர்த்தக வாய்ப்பு உள்ளது. எதிர்வரும் நிதி ஆண்லும் (2014–15) 230 கோடி டாலர் அளவிற்கு ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

**நாமக்கல்லில் 6,500 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு ஏலம்**



**நாமக்கல்,**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னி லையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 6 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

**ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு விற்பனை**

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 20 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 609 முதல் ரூ.5 ஆயிரத்து 30 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி முதல் தரம் ரூ.5 ஆயிரத்து 556 முதல் ரூ.6 ஆயிரத்து 419 வரைக்கும், 2–ம் தரம் ரூ.4 ஆயிரத்து 197 முதல் ரூ.4 ஆயிரத்து 369 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 590 முதல் ரூ.5 ஆயிரத்து 239 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**கடந்த 2 மாதத்தில் நெல் வியாபாரிகளிடம் இருந்து மார்க்கெட் கட்டணமாக 1 கோடி வசூல்**



**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் கடந்த சம்பா பருவத்தில் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. கடந்த ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் சம்பா நெல் அறுவடை உச்சக்கட்டத்தில் இருந்தது. இதனால் வெளி மாவட்ட வியாபாரிகள் கடலூர் மாவட்டத்துக்கு வந்து, விவசாயிகளிடம் இருந்த நெல்லை வாங்கிச் சென்றனர். அவ்வாறு வெளி மாவட்டங்களுக்கு நெல் வாங்கிச்

சென்ற வியாபாரிகள், நெல்லின் மதிப்பில் ரூ.100-க்கு ஒரு ரூபாயை அரசுக்கு மார்க்கெட் கட்டணமாக செலுத்த வேண்டும்.

இதை வசூலிப்பதற்காக சுமார் 10 இடங்களில் வேளாண்மை விற்பனை கமிட்டி சார்பில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாகன தணிக்கை நடைபெற்று வந்தது. கடலூர் மாவட்ட வேளாண்மை விற்பனை கமிட்டி செயலாளர் பாலசிங் தலைமையிலான பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். இந்த வாகன தணிக்கை மூலம் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மார்க்கெட் கட்டணமாக அரசுக்கு ஒரு கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் மார்க்கெட் கட்டணமாக அரசுக்கு ஒரு கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து அதிகரிப்பு**



சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை படத்தில் காணலாம்.

**கள்ளக்குறிச்சி,**

சங்கராபுரம் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத் துக்கு நெல் வரத்து அதிகரித்து காணப் பட்டது.

<u>எள் வரத்து</u>

சங்கராபுரத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் உள்ளது. இங்கு கள்ளக் குறிச்சி, கச்சிராயப் பாளையம், தியாக துருகம் பகுதியில் பயிர் செய் யப்படும் நெல், மக்காச்சோளம் ஆகியவை விற்பனை செய்யப் படுகிறது.

தற்போது எள் சீசன் தொடங்கி இருப்பதால், விற்பனைக்கூடத்துக்கு எள் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று கள்ளக்குறிச்சி சுற்றுப் பகுதியில் இருந்து 120 மூட்டை எள் விற்பனைக்கு வந்தது. ஒரு மூட்டை (100 கிலோ எடை) அதிகபட்சமாக ரூ.7,520-க்கும், குறைந்த பட்சமாக ரூ.6,819-க்கும் விற்பனை யானது.

மக்காச்சோளம் 30 மூட்டை(ஒரு மூட்டை 100 கிலோ) வரத்து வந்தது. இது அதிகபட்சமாக ரூ.1,287-க்கும், குறைந்தபட்சமாக ரூ.1,269-க்கும் வியாபாரி களால் கொள்முதல் செய்யப் பட்டது.

அதே போல் வழக்கமாக 900 மூட்டைகள் வரும் நெல்மூட்டைகள், நேற்று 1,500 மூட்டைகளாக அதிகரித்து காணப்பட்டது. பொன்னி ரக நெல் ஒரு மூட்டை (75 கிலோ எடை) அதிகபட்சமாக ரூ.1,216-க்கும், குறைந்த பட்சமாக ரூ.1,080-க்கு விற்பனையானது.

இதேபோல் கோ-45 ரக நெல் அதிகபட்சமாக ரூ.1,047-க்கும், குறைந்த பட்சமாக 972-க்கும், ஏ.டி.டி.-39 ரக நெல் அதிக பட்சமாக ரூ.1,019-க்கும், குறைந்த பட்சமாக ரூ.920-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.